# எச்.எம்.ஓ.பி. எண்: 37/2023

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 17th day of February 2026

ம.சா.1. பாலச்சந்தர், த/பெ. பலராம கவுண்டர்

## எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது பெங்களூரில் தற்காலிகமாக பிளம்பிங் இன்ஜினியராக வேலை பார்க்கிறேன். கம்பெனியில் வேலை பார்க்கவில்லை. தனிநபரிடம் வேலை பார்க்கிறேன். எனக்கு குறிப்பாக முதலாளி என யாரும் கிடையாது. பிளம்பிங் வேலைக்கு யார் கூப்பிட்டாலும் சென்று வேலை பார்ப்பேன். என் உடன் பிறந்தவர்கள் 2 பேர் உள்ளன. என் அண்ணன் ராஜன் மற்றும் தங்கை பெயர் பிருந்தா ஆகும். அவர்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நான் தற்போது தற்காலிகமாக கே.ஆர்.புரத்தில் உள்ள முருகன் பிஜியில் தங்கியுள்ளேன். எனக்கு மாதம் சுமார் ரூ.20,000/- முதல் ரூ.25,000/- வரை வருமானம் கிடைக்கும். எனது அப்பா அம்மாவிற்கு நிலம் உள்ளது. அவர்களுக்கு சென்னை மற்றும் கொரால்பாக்கம் ஆகிய இடங்களில் வீடுகள் உள்ளது. என் அண்ணன் சென்னையில் உள்ள ஓட்டலில் நிர்வாக பிரிவில் வேலை பார்க்கிறார். சென்னையில் உள்ள வீட்டில் நானும் எனது அண்ணனும் குடும்பத்துடன் மாடியிலும் கீழ் தளத்திலும் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது மனைவி எனது தாய்மாமா மகள் என்றால் சரிதான். எனது அம்மா எதிர்மனுதாரர் தந்தையுடன் பிறந்தவர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த வாட்ஸ் ஆப் பரிவர்த்தனைகளின் அசல் பதிப்பு என்னிடம் இல்லாததால் அவற்றை ஆவணமாக நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலவில்லை. மேற்கண்ட ஆவணத்தை சாட்சிய சட்டத்தின்படி உரிய மனு செய்து தான் குறியீடு செய்ய இயலும் என்ற விவரம் எனக்கு அந்த ஆவணத்தை தாக்கல் செய்யும் போது எனக்கு தெரியாது. அந்த வாட்ஸ் ஆப் வரபெற்ற அலைபேசி தற்போது என்னிடம் இல்லை. மேற்கண்ட ஆவணம் எதிர்மனுதாரரை தவறாக சித்தரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் என்னால் பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பொதுவாகவே என்னை பற்றியும் என் குடும்பத்தை பற்றியும் அவதூறாக பேசுவார். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணமானது இரு வீட்டார் ஏற்பாடு செய்த திருமணம் ஆகும். திருமணத்திற்கு முன்னரே எனக்கு எதிர்மனுதாரரின் குணாதிசயங்கள் பற்றி தெரியும் என்றால் தெரியாது. திருமணத்திற்கு எதிர்மனுதாரர் வீட்டில் என்ன சீர்வரிசைகள் செய்தார்கள் என எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பொருட்கள் எதிர்மனுதாரர்களிடம் தான் உள்ளன. எதிர்மனுதாரர் என்மீது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் மனு செய்துள்ளார் என்றால் ஆமாம். அங்கு அவர் என்மீது என்ன பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு செய்துள்ளார் என்றால் ஒரு பிரிவை தவிர அனைத்து பிரிவுகளிலும் என்மீது குற்றம் சுமத்தியுள்ளார். அந்த மனுவில் நான் மட்டும் தான்

எதிரியாக உள்ளேன். தற்போது சுமார் 4 வருடங்களாக எதிர்மனுதாரரை நான் பிரிந்து வாழ்ந்து வருகிறேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் ஒரு பெண் குழந்தை உள்ளது. குழந்தை பெயர் தீக்ஷா ஆகும். அவருக்கு 11 வயதாகிறது. அவர் தற்போது எங்க என்ன படிக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நானும் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வரும் காலத்தில் அவருக்கோ எனது மகளுக்கோ எந்த சவரட்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். நடுவர் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தனக்கு வாழ்வாதார தொகை வேண்டும் என இடைகால மனு செய்து அதில் இடைகால ஜீவனாம்சம் வழங்கி உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். அதில் மாதம் எவ்வளவு உத்தரவாகியுள்ளது என பார்த்து தான் சொல்ல இயலும். மேற்கண்ட DVC வழக்கானது 2023ம் வருடம் போடப்பட்டது ஆகும். அந்த மனு தாக்கல் செய்து அதே வருடம் அதில் உத்தரவு ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவு படி எதிர்மனுதாரருக்கு நான் இடைகால ஜீவனாம்சம் எதுவும் வழங்கினேனா என்றால் இது வரை தரவில்லை. எதிர்மனுதாரர் வீட்டில் திருமணத்திற்கு அவருக்கு கொடுக்கப்பட்ட 13 சவரன் நகை தற்போது என்வசம் உள்ளது என்றால் இல்லை. அவரிடம் தான் உள்ளது. எதிர்மனுதாரர் என்னிடம் பிரச்சனை ஏற்பட்டு தான் பிரிந்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு பிரிந்து வரும் போது அவர் எந்த நகையும் எடுத்து வரவில்லை என்றும் சென்னையில் உள்ள என் வீட்டில் தான் நகையை வைத்துவிட்டு வந்தார் என்றால் சரியல்ல. அவர் அம்மா வீட்டில் தான் இருந்தார். 2018ம் வருடம் தான் எதிர்மனுதாரர் சென்னையில் என் வீட்டில் தான் இருந்தார். அதன் பின்னர் அவர் தன் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் எதிர்மனுதாரரை வளைகுடா நாட்டிற்கு அழைத்து சென்று வாழ்ந்து வந்தது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதிர்மனுதாரரே வழக்கில் அதை ஒப்புக்கொண்டுள்ளார். நான் தான் எதிர்மனுதாரருக்கு விசா மற்றும் விமான கட்டணம் எடுத்துக்கொடுத்தேன். தற்போது சாட்சி யார் செலவில் அவர் வெளிநாடு வந்தார் என தன்னால் சொல்ல இயலாது என தெரிவிக்கிறார். அங்கு எதிர்மனுதாரர் என்னுடன் வீண் சண்டை சச்சரவு செய்தது சம்மந்தமாக அந்த நாட்டில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்னரே எனது குடும்பம் குறித்து எதிர்மனுதாரருக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய குடும்ப பெருமை, புகழ் குறித்து எதிர்மனுதாரருக்கு தெரியும் என்றால் தெரியும். அவ்வாறு தெரிந்திருக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர் எங்களை பற்றி அவதூறாக பேசி இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சண்டையிட்டு கொண்டிருந்ததால் வளைகுடா நாட்டில் வேலை செய்ய இயலாமல் நான் திரும்பி வந்துவிட்டேன். நானும் எதிர்மனுதாரரும் வெவ்வேறு நாட்டில் வசித்து வந்ததால் தான் நான் சென்னைக்கு மாறி வந்தேனா என்றால் நாங்கள் இருவரும் தான் அங்கிருந்தது சென்னைக்கு வந்தோம். எதிர்மனுதாரர் எங்கள் கூட்டு குடும்பத்தினருக்கு சமையல் செய்து கஷ்டப்பட்டு வந்ததாகவும் அதனால் எங்களை திட்டுவார் என நான் பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. சென்னையில் குரோம்பேட்டையில் உள்ள வீட்டில் நாங்கள் கீழ் தளத்திலும் என் அண்ணன் மாடியிலும் குடியிருந்து வந்தோம். எனது அப்பாவும் அம்மாவும் போளூருக்கு அருகில் உள்ள கொரால்பாக்கம் கிராமத்தில் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் வளைகுடா நாட்டில் இருந்து வந்த போது சுமார் 2 முதல் 3 மாதங்கள் ஒன்றாக கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம். அதன் பின்னர் தனியாக சென்றுவிட்டோம். நான் எனது மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் எந்த காலத்திலும் கூட்டு குடும்பமாக வாழ்ந்தது இல்லை என்றால் சரியல்ல. 11.03.2018 ம் தேதி எதிர்மனுதாரர் தனது தாய் வீட்டில் வாழ்ந்ததாக நான் தெரிவித்துள்ள நிலையில் அப்போதும் நான் அவருக்கு எந்த பராமரிப்பு தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கொடுத்துள்ளேன். நான் எதிர்மனுதாரர் செய்கை குறித்து அவருடைய தாயிடம் சொன்னதாகவும் அவர் அதை கண்டுகொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கும் எனக்கும் அடிக்கடி பிரச்சனை வந்தது சம்மந்தமாக நாங்கள் இருவரும் மருத்துவ ஆலோசனைக்கு சென்றோமா என்றால் இல்லை. எதிர்மனுதாரருடன் பிரச்சனை ஏற்படுவது சம்மந்தமாக காரணம் அறிய நான் மருத்துவ ரீதியாக எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விவாகரத்து மனுவானது எதிர்மனுதாரர் இனிமேல் என்னுடன் வாழ இயலாது என அருதியிட்டு கூறிய பின்பு தான் நான் தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் எதிர்மனுதாரருக்கு என்னுடன் பிரிந்து வாழும் எண்ணம் இல்லை என்றும் அவர் எப்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தான் விரும்பினார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் வளைகுடா நாட்டில் வேலை பார்த்த போது எதிர்மனுதாரர் விசா எடுத்து கொண்டு அங்கு வந்தார் என்றால் சரிதான். நான் வளைகுடா நாட்டில் வேலை செய்த போது சென்னையில் இருந்த எதிர்மனுதாரரின் செலவிற்கு பணம் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். உண்மையில் நான் அவ்வாறு பணம் எதுவும் அனுப்பவில்லை என்றும் வழக்கிற்காக அனுப்பியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சென்னையில் வசித்த போது மாடியில் வசித்த என் அண்ணன் குடும்பத்துடன் பேசுவது இல்லை என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் திரும்பி வந்த போது கேட்டு தெரிந்து கொண்டேன். என்ன காரணத்திற்காக அவர் என் அண்ணன் குடும்பத்துடன் பேசவில்லை என்பதை கேட்டு தெரிந்து கொண்டேன். அந்த காரணத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மீது சம்மந்தம் இல்லாத குற்றச்சாட்டுகளை வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் நான் மேற்கண்டவாறு பொய்யான விஷயங்களை வழக்கில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் ஒன்றாக குடும்பம் நடத்தி வந்த போது தான் எதிர்மனுதாரர் சென்னையில் உள்ள ஒரு ஆங்கில

வழி பள்ளியில் என் குழந்தையை சேர்த்து படிக்க வைத்து வந்தார் என்றால் சரிதான். நான் வளைகுடா நாட்டில் இருந்து வந்த பின்னர் குழந்தை என்ன படிக்கிறது எந்த பள்ளியில் படிக்கிறது என தெரிந்து கொள்ளவில்லை என்றால் அப்போது கோவிட் பெருந்தொற்று காலமானதால் பள்ளி எதுவும் நடக்கவில்லை. நான் எந்த காலத்திலும் எதிர்மனுதாரருக்கு நல்ல கணவனாகவோ எனது குழந்தைக்கு நல்ல தந்தையாகவோ நடந்து கொண்டது இல்லை என்றால் சரியல்ல. நான் வளைகுடா நாட்டில் இருந்து வந்தவுடன் எனது குழந்தை போளூரில் உள்ள ராமஜெயம் பள்ளியில் தான் படித்து வந்தது. எனது குழந்தைக்கு 6 வது ஆண்டு பிறந்த விழா வந்ததாகவும் அதற்கு எதிர்மனுதாரர் எந்த வித ஏற்பாடும் செய்யாமல் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்

Sd/- S. Senthilbabu,

சாட்சியின் கையொப்பம்

சார்பு நீதிபதி,
போளூர்.